winmeen.com

மூன்றாம் வார நடப்பு நிகழ்வுகள்

டிசம்பர் 2020

டிசம்பர் 15–21

நடப்பு நிகழ்வுகள்

1.எந்த நாடு அதன் 'தரவு ஒலிப்படுத்துதல் – Data Sonification' திட்டத்தின்கீழ், அண்டத்தின் முக்கியமான நிகழ்வுகளின் ஒலியை பிரித்தெடுத்துள்ளது?

அ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஆ. டென்மார்க்

இ. சுவீடன்

ஈ. ஜெர்மனி

❖ பேச்சு அல்லாத தரவை ஒலியாக மொழிபெயர்ப்பதற்காக, 'Data Sonification' என்றவொரு திட்டத்தை NASA செயல்படுத்தி வருகிறது. அண்மையில், சந்திரா X கதிர் மையத்தைச் சார்ந்த ஆராய்ச்சியாளர்கள், அண்டத்தின் மூன்று முக்கிய நிகழ்வுகளைப்பயன்படுத்தினர். மேலும், ஒளியின் அதிர்வெண்களை வெவ்வேறு ஒலியின் சுருதிக்கு மொழிபெயர்த்துள்ளனர். நண்டுவடிவ நெபுலா, புல்லட் கிளஸ்டர் மற்றும் சூப்பர் நோவா ஆகிய மூன்றும் அம்முக்கிய நிகழ்வுகளாம்.

2.நானா அடோ டங்க்வா அகுபோ–அடோ என்பவர் கீழ்க்காணும் எந்த நாட்டின் அதிபராக மீண்டும் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்?

அ. நமீபியா

ஆ. கென்யா

இ. கானா ☑

ஈ. துனிசியா

❖ கானாவின் தற்போதைய அதிபராக இருக்கும் நானா அடோ டங்க்வா அகுபோ–அடோ, இரண்டாவது முறையாக அந்நாட்டின் அதிபராக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவர், தனக்கு போட்டி வேட்பாளருக்கு நின்ற முன்னாள் அதிபர் ஜான் மகாமாவுக்கு (48%) எதிராக 51.2 சதவீத வாக்குகளைப் பெற்றார்.

3.எந்த நாகரிகத்தின் குடியிருப்புகளின் எச்சங்களில் கால்நடை இறைச்சி கண்டறியப்பட்டுள்ளது?



அ. மொகஞ்சதாரோ நாகரிகம்

ஆ. சிந்து சமவெளி நாகரிகம் ☑

இ. கீழடி நாகரிகம்

ஈ. நைலாற்று நாகரிகம்

❖ சமீபத்தில், சிந்து சமவெளி நாகரிகத்தின் குடியிருப்புகளின் எச்சங்களில் பன்றி, எருமை, செம்மறியாடு & ஆடு போன்ற கால்நடைகளின் இறைச்சிகள் இருப்பதை ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர். இந்தியாவின் வடக்கு மற்றும் மேற்கு பகுதியில் உள்ள இந்நாகரிகத்தின் நகர்ப்புற மற்றும் கிராமப்புற குடியிருப்புகளில் காணப்பட்ட பீங்கான் பாத்திரங்களில் மேற்கொள்ளப்பட்ட கொழுப்புமீத பகுப்பாய்வில் இருந்து இது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

4.தேசிய கவிஞர் 'சுப்பிரமணிய பாரதி' பிறந்த ஊர் எது?

அ. எட்டயபுரம் ☑

ஆ. நாகலாபுரம்

இ. திருச்செந்தூர்

ஈ. கடலூர்

❖ 'மகாகவி' சுப்பிரமணிய பாரதியார் அவர்கள் தூத்துக்குடியில் உள்ள எட்டயபுரம் என்ற ஊரில் பிறந்தார். அவர் ஒரு இந்திய விடுதலைப்போராளியும், இதழாளர் மற்றும் தமிழ் இலக்கியத்தின் முன்னோடியும் ஆவார். அவரை கௌரவிக்கும் வகையில், 'பன்னாட்டு பாரதி விழா'வானது சென்னையில் வானவில் கலாசார மையத்தால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

❖ அவரது 138ஆம் பிறந்தநாள் 2020 டிச.11 அன்று அனுசரிக்கப்பட்டது. பிரதமர் நரேந்திர மோடி பங்கேற்று எழுத்தாளர் சீனி விசுவநாதனுக்கு 'பாரதி' விருதை வழங்கினார்.

5.ஒவ்வோர் ஆண்டும் உலகளாவிய சுகாதார காப்பீடு நாள் அனுசரிக்கப்படுகிற தேதி எது?

அ. டிசம்பர் 11

ஆ. டிசம்பர் 12 ☑

இ. டிசம்பர் 13

ஈ. டிசம்பர் 14

❖ ஒவ்வோர் ஆண்டும் டிச.12 அன்று உலக நலவாழ்வு அமைப்பால் உலகளாவிய நலவாழ்வுக் காப்பீடு நாளாக அனுசரிக்கப்படுகிறது. எந்தவொரு பண நெருக்கடியும் இல்லாமல் அனைத்து மக்களும் தரமான நலவாழ்வுச் சேவைகளைப் பெறுவதை இந்நாள் உறுதிசெய்கிறது. உலகளாவிய நலவாழ்வுக்காப்பீடை ஐநா அவையால் நீடித்த வளர்ச்சி இலக்குகளாக சேர்க்கப்பட்டுள்ளது. "Health for All: Protect Everyone" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

6.உலகின் முதலாவது செயற்கைக்கோள் அடிப்படையிலான குறுகலான–IoT வலையமைப்பை உருவாக்கியுள்ள இந்திய தொலைத்தொடர்பு நிறுவனம் எது?

அ. ஜியோ



ஆ. BSNL ☑

இ. ஏர்டெல்

ஈ. VI

❖ இந்தியாவில் செயற்கைக்கோள் அடிப்படையிலான குறுகலான IoT நெட்வொர்க்கை அறிமுகப்படுத்தும் நோக்கோடு இந்திய அரசுக்கு சொந்தமான தொலைத்தொடர்பு நிறுவனமான BSNL எந்திர இணைப்பு தீர்வுகள் நிறுவனமான ஸ்கைலோடெக் இந்தியாவுடன் இணைந்து செயல்பட்டு வருகிறது. இந்தத் தீர்வு BSNL'இன் செயற்கைக்கோளை நிலப்புற உட்கட்டமைப்புடன் இணைக்கும்.

- இது உலகின் முதல் செயற்கைக்கோள் அடிப்படையிலான குறுகலான–IoT நெட்வொர்க் ஆகும். IoT இணைப்பு ஏற்கனவே இந்திய இரயில்வே மற்றும் மீன்பிடி கப்பல்களில் சோதனை செய்யப்பட்டுள்ளது.

7.தேசிய தூய்மை கங்கை திட்டம் ஏற்பாடு செய்துள்ள தேசிய அளவிலான உச்சிமாநாட்டின் பெயர் என்ன?

அ. இந்தியா கங்கை உச்சிமாநாடு

ஆ. இந்திய நீர்தாக்க உச்சிமாநாடு ☑

இ. கங்கா புத்துணர்ச்சி உச்சி மாநாடு

ஈ. தூய்மையான கங்கை உச்சிமாநாடு

- ஐந்தாவது இந்திய நீர்தாக்க உச்சிமாநாடானது (India Water Impact Summit) அண்மையில் ஆர்த் கங்கா –நதி பாதுகாப்பு ஒத்திசைக்கப்பட்ட வளர்ச்சியை மையமாகக்கொண்டு தொடங்கப்பட்டது. ஆறுகள் மற்றும் நீர்நிலைகளின் விரிவான பகுப்பாய்வு மற்றும் முழுமையான மேலாண்மை என்பது இந்த உச்சி மாநாட்டின் கருப்பொருளாகும். இந்த உச்சிமாநாட்டை தேசிய தூய்மை கங்கை திட்டமும் கங்கை நதிப் படுகை மேலாண்மை மற்றும் ஆய்வுகள் மையமும் (கேங்கா) ஏற்பாடு செய்துள்ளன.

8.ABTO பன்னாட்டு மாநாட்டை ஏற்பாடு செய்கிற மத்திய அமைச்சகம் எது?

அ. வெளிவிவகார அமைச்சகம்

ஆ. சுற்றுலா அமைச்சகம் ☑

இ. கலாச்சார அமைச்சகம்

ஈ. உள்துறை அமைச்சகம்

- ABTO (பௌத்த சுற்றுலா செயற்பாட்டாளர்கள் சங்கம்) பன்னாட்டு மாநாடு என்பது சுற்றுலா அமைச்சகத்துடன் இணைந்து ABTO'ஆல் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்வு ஆகும். ABTO என்பது இந்தியா மற்றும் வெளிநாட்டில் 1500'க்கும் மேற்பட்ட உறுப்பினர்களைக்கொண்ட ஓர் அமைப்பாகும். இது, பீகார் மாநிலத்தில் உள்ள போத்கயாவில் 2018 முதல் ABTO மாநாடு மற்றும் பன்னாட்டு பௌத்த பயண சந்தை ஏற்பாடு செய்து வருகிறது.

9.இந்தியாவின் எந்தப் பரப்புரையை அண்மையில் உலக நலவாழ்வு அமைப்பு (WHO) பாராட்டியது?

அ. Fitness Ka Dose Aadha Ghanta Roz ☑

ஆ. Fit Hai to Hit Hai

இ. Khelo India

ஈ. Run India Run

- இந்தியாவின், 'பிட்னஸ் கா டோஸ், ஆதா காந்தா ரோஸ்' என்ற முயற்சியை உலக நலவாழ்வு அமைப்பு (WHO) சமீபத்தில் பாராட்டியுள்ளது. உடற்பயிற்சிகளை மேம்படுத்துவதை நோக்கமாகக்கொண்ட இந்தப் பரப்புரை, நாடு தழுவிய 'கட்டுடல் இந்தியா' இயக்கத்தின் ஒருபகுதியாக தொடங்கப்பட்டது.

- ஒவ்வொரு நாளும் குறைந்தது 30 நிமிட உடற்பயிற்சி நடவடிக்கைகளை அனைத்து இந்தியர்களும் பின்பற்ற வேண்டும் என்று அது கேட்டுக்கொள்கிறது.

10.பன்னாட்டு மலைகள் நாள் கொண்டாடப்படும் தேதி எது?

அ. டிசம்பர் 11 ☑

ஆ. டிசம்பர் 12

இ. டிசம்பர் 13

ஈ. டிசம்பர் 14

- மலைகளைப் பாதுகாப்பதையும், மலையகங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்து –வதையும், மலையின் சுற்றுச்சூழலை பாதுகாப்பதையும் நோக்கமாகக்கொண்டு ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.11 அன்று பன்னாட்டு மலைகள் நாள் கொண்டாடப்படுகிறது. "Mountain biodiversity" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

நடப்பு நிகழ்வுகள்

1.இந்திய முரைனா புற்களின் புதிய இனங்கள் கீழ்க்காணும் எந்த மாநிலத்தில் காணப்படுகின்றன?

அ. கோவா ☑

ஆ. அஸ்ஸாம்

இ. மேற்கு வங்கம்

ஈ. மகாராஷ்டிரா

- அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறையின் தன்னாட்சி நிறுவனமான புனேவின் அகர்கர் ஆராய்ச்சி நிறுவனம் சமீபத்தில் ஒரு புதிய வகை முரைனா புல்லைக் கண்டறிந்துள்ளது. 'இஸ்கேமம்' என்னும் புல் வகையினத்தைச் சார்ந்த இது, வெப்பமண்டல மற்றும் துணைவெப்பமண்டல பகுதிகளில் பரவலாக காணப்படுகிறது. இது பொதுவாக 'முரைனா புல்' என்று அழைக்கப்படுகிறது.
- மேற்குத்தொடர்ச்சிமலையில் கோவாவில் இதன் புதிய இனமொன்று கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. கோவா பல்கலையின் தாவரவியல் பேராசிரியர் M K ஜனார்த்தனம் அவர்களின் நினைவாக, ***'Ischaemum janarthanam'*** என்று அப்புதிய புல்லினத்திற்கு பெயரிடப்பட்டுள்ளது.

2.CEEW'இன் அண்மைய ஆய்வின்படி, தீவிர காலநிலை நிகழ்வுகளின் ஹாட்ஸ்பாட்களாக இருக்கும் இந்திய மாவட்டங்களின் சதவீதம் என்ன?

அ. 55

ஆ. 65

இ. 75 ☑

ஈ. 85

- எரிசக்தி, சுற்றுச்சூழல் மற்றும் நீர் கவுன்சில் (CEEW) வெளியிட்டுள்ள ஓர் ஆய்வின்படி, இந்தியாவில் 75 சதவீதத்திற்கும் அதிகமான மாவட்டங்கள் தீவிர காலநிலை நிகழ்வுகளின் ஹாட்ஸ்பாட்களாக உள்ளன. 63.8 கோடிக்கும் அதிகமான மக்கள் வசிக்கும் அம்மாவட்டங்கள் சூறாவளி, வெள்ளம், வறட்சி, வெப்ப மற்றும் குளிர் அலைகள் போன்ற தீவிர காலநிலை நிகழ்வுகளின் ஹாட்ஸ்பாட்களாகும். நாட்டின் தீவிர வானிலை நிகழ்வு ஹாட்ஸ்பாட்கள் வரைபடமாக்கப்படுவது இதுவே முதல்முறையாகும்.

3. HIMS – மருத்துவமனை மேலாண்மை தகவல் அமைப்பை தொடங்கியுள்ள அமைப்பு எது?

அ. இந்திய இரயில்வே ☑

ஆ. இந்திய வான்படை

இ. இந்தியக் கடற்படை

ஈ. AIIMS

- இந்திய இரயில்வே, மருத்துவமனை மேலாண்மை தகவல் அமைப்பு சோதனைத் திட்டத்தை, தெற்கு மத்திய இரயில்வே மண்டலத்தில் அறிமுகப்படுத்தியுள்ளது. இரயில்வே ஊழியர்களின் நலனுக்காக,

மற்றொரு தகவல் தொழில்நுட்ப நடவடிக்கையாக, மருத்துவமனை மேலாண்மை தகவல் அமைப்பை இந்திய இரயில்வே தொடங்கியுள்ளது. இந்தப் புதிய அமைப்பானது நலவாழ்வுச் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும், மருத்துவ வசதிகளை வெளிப்படையாகப் பயன்படுத்த உதவும்.

4. "ஹீரோஸ் ஆப் 2020" என்றவொன்றை வெளியிடும் அமைப்பு எது?

அ. பில் & மெலிண்டா அறக்கட்டளை

ஆ. UNESCO

இ. டைம்ஸ் இதழ் ☑

ஈ. NDTV

❖ "2020'இன் ஹீரோக்கள்" என்பதை டைம்ஸ் இதழ் வெளியிடுகிறது. அது, "கடமையைத் தாண்டியும் சேவை செய்வோரை" கௌரவிக்கிறது. ஜார்ஜ் பிலாய்ட் கொல்லப்பட்டதற்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட 70'க்கும் மேற்பட்டவர்களுக்கு தனது வாஷிங்டன் D C வீட்டின் கதவுகளைத் திறந்தமைக்காக இந்திய–அமெரிக்கரான இராகுல் துபே இந்தப்பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.

5. டிசம்பர்.9 அன்று, எந்தக் கருப்பொருளின்கீழ் பன்னாட்டு ஊழல் எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்பட்டது?

அ. The Power of People's pressure

ஆ. Recover with Integrity ☑

இ. Fight Corruption

ஈ. End of corruption

❖ ஊழல் குறித்து பொதுமக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கும், எவ்வாறு அதை எதிர்த்துப் போராடுவது என்பது குறித்தும் பரப்புவதற்காக, ஒவ்வோர் ஆண்டும் டிச.9 அன்று பன்னாட்டு ஊழல் எதிர்ப்பு நாள் அனுசரிக்கப்படுகிறது. கடந்த 2003ஆம் ஆண்டில் மெக்ஸிகோவில் கையெழுத்திடப்பட்ட ஊழலுக்கு எதிரான ஐ.நா. தீர்மானத்தின் அங்கிகாரத்திற்காகவும் இந்த நாள் அனுசரிக்கப்படுகிறது. "Recover with Integrity" என்பது நடப்பாண்டில் (2020) வரும் இந்நாளுக்கான கருப்பொருளாகும்.

6.அண்மையில் எந்தத் தேதியில், தேசிய ஆற்றல் பாதுகாப்பு நாள் (National Energy Conservation Day) இந்தியாவில் கொண்டாடப்பட்டது?

அ. டிசம்பர் 11

ஆ. டிசம்பர் 12

இ. டிசம்பர் 13

ஈ. டிசம்பர் 14 ☑

❖ தேசிய ஆற்றல் பாதுகாப்பு நாளானது ஒவ்வோர் ஆண்டும் டிசம்பர்.14 அன்று கொண்டாடப்படுகிறது. மத்திய எரிசக்தி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் எரிசக்தித்திறன் பணியகமானது (BEE) 1991ஆம் ஆண்டு முதல் ஒவ்வோர் ஆண்டும் இந்நாளைய கொண்டாட்டங்களுக்கு தலைமைதாங்குகிறது.

- ஆற்றல் சேமிப்பு மற்றும் நீடித்த எரிசக்தி ஆதாரங்களுக்கு மாறவேண்டியதன் அவசியம் குறித்து BEE மக்களிடையே விழிப்புணர்வை பரப்புகிறது.

7. அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, "The Presidential Years" என்பது கீழ்க்காணும் எந்த இந்தியக் குடியரசுத்தலைவரின் நினைவுக்குறிப்பு ஆகும்?

அ. பிரதிபா பாட்டீல்

ஆ. பிரணாப் முகர்ஜி ☑

இ. இராம்நாத் கோவிந்த்

ஈ. APJ அப்துல் கலாம்

- "The Presidential Years" என்பது இந்தியாவின் காலஞ்சென்ற முன்னாள் குடியரசுத்தலைவர் பிரணாப் முகர்ஜி எழுதிய வரவிருக்கும் நூலாகும். இந்த நினைவுக்குறிப்பு, வரும் 2021 ஜனவரியில் உலகளவில் வெளியிடப்படும் நினைவுக்குறிப்புகளின் நான்காவது தொகுதியாகும். 2017ஆம் ஆண்டில், "The Coalition Years – 1996–2012" என்ற சுயசரிதையின் மூன்றாவது தொகுதி வெளியானது.

8.கடல் மட்டத்திலிருந்து 3000 மீட்டர் உயரத்தில் இராயல் வங்கப்புலியைக் கண்ட நாடு எது?

அ. இந்தியா

ஆ. நேபாளம் ☑

இ. பிரேசில்

ஈ. தென்னாப்பிரிக்கா

- அண்மையில் கடல்மட்டத்திலிருந்து 3165 மீ உயரத்தில் கம்பீரமான இராயல் வங்கப்புலியை (பாந்தெரா டைக்ரிஸ்) நேபாளம் முதன்முதலில் கண்டறிந்துள்ளது. அனைத்து ஆசிய பெரிய பூனை வகைகளிலும் மிகப்பெரியதான இதனை வனத்துறை தனது கேமராமூலம் கண்டுபிடித்துள்ளது. கிழக்கு நேபாளத்தின் கஞ்சஞ்சங்கா நிலப்பரப்புக்கு அந்நாடு சிறப்பு கவனம் செலுத்த உள்ளது. இது இந்தியாவின் சிங்காலியா தேசிய பூங்கா மற்றும் டூவர்ஸ் வெள்ளப்பெருக்குச் சமவெளிகளுக்கு இணைப்பை வழங்குகிறது.

9. நீடித்த மலை மேம்பாட்டுக்கான உச்சிமாநாட்டை ஏற்பாடு செய்துள்ள அமைப்பு எது?

அ. பன்னாட்டு மலை நிறுவனம்

ஆ. இந்திய மலை முன்னெடுப்பு ☑

இ. WHO

ஈ. UNESCO

- இந்திய மலைகள் முன்னெடுப்பானது டேராடூனில் 9ஆவது நீடித்த மலைகள் மேம்பாட்டுக்கான உச்சி மாநாட்டை நடத்தியது. COVID–19 தொற்றுநோயைக் கருத்தில்கொண்டு இவ்வுச்சிமாநாடு மெய்நிகராக நடத்தப்பட்டுள்ளது. நான்கு நாள் நடைபெற்ற இவ்வுச்சிமாநாடு இடம்பெயர்வு, நீர் பாதுகாப்பு, காலநிலை நெகிழ்திறன்போன்ற தலைப்புகளில் கவனம் செலுத்தியது.

10.இந்தியாவின் முதல் mRNA தடுப்பூசியை உருவாக்கியுள்ள மருந்து நிறுவனம் எது?

அ. ஜெனோவா நிறுவனம் ☑

ஆ. சீரம் நிறுவனம்

இ. சிப்லா நிறுவனம்

ஈ. ரான்பாக்ஸி

❖ இந்தியாவில் முதன்முறையாக தயாரிக்கப்பட்ட mRNA தடுப்பூசியை மனிதர்களிடம் முதல் & இரண்டாம் கட்ட பரிசோதனைகள் மேற்கொள்ள இந்திய மருந்து கட்டுப்பாட்டு அமைப்பு ஒப்புதல் வழங்கியுள்ளது. புனேவில் உள்ள ஜெனோவா நிறுவனம் HGCO19 என்ற mRNA தடுப்பூசியை தயாரித்துள்ளது. உயிரி தொழில்நுட்பத்துறையின் ஆதவில் இந்தத்தடுப்பூசி தயாரிக்கப்பட்டுள்ளது. பெருந்தொற்று பிரச்சனைக்கு தீர்வுகாண mRNA அடிப்படையிலான தடுப்பூசிகள், அறிவியல்பூர்வமாக சிறந்ததேர்வாக கருதப்படுகிறது.

நடப்பு நிகழ்வுகள்

1. EXIM வங்கியானது எந்நாட்டின் உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக $448 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடனை வழங்கவுள்ளது?

அ. சீனா

ஆ. மியான்மர்

இ. உஸ்பெகிஸ்தான் ☑

ஈ. கஜகஸ்தான்

❖ ஏற்றுமதி–இறக்குமதி வங்கியானது (EXIM வங்கி) அண்மையில் உஸ்பெகிஸ்தான் நாட்டின் பல்வேறு உட்கட்டமைப்பு திட்டங்களுக்காக $448 மில்லியன் அமெரிக்க டாலர் மதிப்பிலான கடன் தவணையை நீட்டித்துள்ளது. இந்திய அரசின் சார்பாக நீட்டிக்கப்பட்ட இந்தக் கடன் தவணை, நாட்டின் போக்குவரத்து, நீர் மற்றும் தொழில்நுட்ப துறைகளில் பல்வேறு திட்டங்களில் பயன்படுத்தப்படும். EXIM வங்கி இதுவரை 266 கடன் தவணைகளை பல்வேறு நாடுகளுக்கு நீட்டித்துள்ளது.

2.ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பு தூதர்களுக்காக திரைப்படத் தொடர்களைத் தொடங்குவதற்கான இந்தியாவின் முன்முயற்சியின் பெயர் என்ன?

அ. CinemaSCOpe ☑

ஆ. IndiaSCOpe

இ. KaleidoSCOpe

ஈ. SCOre

❖ பெய்ஜிங்கில் உள்ள இந்திய தூதரகம் அண்மையில் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்புக்காக (SCO) "CinemaSCOpe" என்ற திரைப்படத்தொடரை (Movie Series) அறிமுகப்படுத்தியது. இந்த நிகழ்ச்சியின்கீழ், ருஷிய மொழியில் மொழிமாற்றம் செய்யப்பட்ட 24 இந்திய திரைப்படங்கள் மாதாந்திர அடிப்படையில் திரையிடப்படும். 2023'இல் நடைபெறும் SCO 'நாடுகளின் தலைவர்களின் கவுன்சில்' கூட்டத்திற்கு இந்தியா தலைமைதாங்கும் நாள் வரை இந்தத் திரையிடல் தொடரும்.

3. 'அங்காரா A5' என்ற பெயரில் ஹெவி லிப்ட் ஸ்பேஸ் இராக்கெட்டை சோதனை செய்த நாடு எது?

அ. சீனா

ஆ. இரஷ்யா ☑

இ. இஸ்ரேல்

ஈ. UAE

❖ இரஷ்யா தனது 'அங்காரா A5' என்ற ஹெவி லிப்ட் ஸ்பேஸ் ஏவுகணையை இரண்டாவது முறையாக வெற்றிகரமாக சோதனை செய்துள்ளது. இதற்கு முன்பு கடந்த 2014'இல் அது சோதனை செய்யப்பட்டது. அந்நாட்டின் விண்வெளி நிறுவனமான ரோசுகோசுமோசின் கூற்றுப்படி, இந்த அங்காரா ஏவுகணைகள்

நச்சுவாய்ந்த எரிபொருள்களைப் பயன்படுத்துவதில்லை. இதனால் ஏவுதள வளாகத்தை ஒட்டியுள்ள பகுதிகளிலும், ஏவுகணை செல்லும் மண்டலங்களிலும் சுற்றுச்சூழல் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது.

4. FAO'இன் கூற்றுப்படி, 2021'ஆம் ஆண்டில் கீழ்க்காணும் எந்த நாட்டின் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பசிக்கு ஆளாக நேரிடும்?

அ. ஓமான்

ஆ. கென்யா

இ. சோமாலியா

ஈ. ஏமன் ☑

❖ ஐநா அவையின் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பானது (FAO) 2021ஆம் ஆண்டில் ஏமனில் 5 மில்லியனுக்கும் அதிகமான மக்கள் பட்டினியை நோக்கிச் செல்வார்கள் எனக் கூறியுள்ளது. மேலும், அந்நாட்டில் உள்ள 50,000'க்கும் மேற்பட்ட மக்கள் அடுத்த ஆண்டுக்குள் பஞ்ச நிலைக்குச்செல்வார்கள் எனவும் FAO மதிப்பிட்டுள்ளது. 2014ஆம் ஆண்டு முதல் உள்நாட்டுப் போரில் ஏமன் ஈடுபட்டுள்ளது. இதன் காரணமாக அதன் இயல்பு வாழ்க்கை கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளது.

5.ஐநா அவையானது 2021ஆம் ஆண்டை கீழ்க்காணும் எதுவாக அறிவித்துள்ளது?

அ. பன்னாட்டு படைப்புப் பொருளாதாரத்திற்கான ஆண்டு ☑

ஆ. பன்னாட்டு கொள்ளைநோய் ஆராய்ச்சிக்கான ஆண்டு

இ. பன்னாட்டு அமைதிக்கான ஆண்டு

ஈ. பன்னாட்டு தடுப்பூசிக்கான ஆண்டு

International Year of Creative Economy for Sustainable Development 2021

❖ 2021ஆம் ஆண்டானது ஐநா அவையால் நீடித்த வளர்ச்சிக்கான ஆக்கபூர்வமான பொருளாதாரத்தின் பன்னாட்டு ஆண்டாக (International Year of Creative Economy for Sustainable Development) அறிவிக்கப்பட்டுள்ளது. இம்மாதம் நடைபெற்ற ஐநா பொதுச்சபைக் கூட்டத்தில் இது முடிவுசெய்யப்பட்டது. இந்தோனேசியாவால் தொகுக்கப்பட்ட இந்தத்திட்டத்தை சீனா, இந்தியா, ஆஸ்திரேலியா, பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து உள்ளிட்ட நாடுகளின் குழு ஐ. நாவிடம் வழங்கின.

6.கீழ்க்காணும் எந்த அமைப்பு, "ஆபரேஷன் ஆலிவா" என்றவொன்றைத் தொடங்கியுள்ளது?

அ. தேசிய உயிரிபல்வகைமை ஆணையம்

ஆ. இந்தியக் கடலோரக் காவல்படை ☑

இ. WWF இந்தியா

ஈ. இந்திய வான் படை

❖ இந்தியக் கடலோரக் காவல்படையானது அண்மையில் "ஆபரேஷன் ஆலிவா" என்ற பெயரில் ஒரு நடவடிக்கையை தொடங்கியது. இந்த நடவடிக்கை, ஒடிசா கடற்கரையின் ஆலிவ் ரிட்லி ஆமைகளை பாதுகாப்பதை நோக்கமாகக்கொண்டுள்ளது. மீன்பிடிக் கப்பல்கள் நுழைவதைத் தடுக்கும் நோக்கில்,

கடலோரக்காவல்படை, ஆலிவ் ரிட்லிகள் கூடு கட்டும் இடங்களுக்கு அருகே 2 கப்பல்களை ஏவியுள்ளது. இதன் ஒருபகுதியாக கடலோர காவல்படையின் வானூர்திகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

7.அண்மையில் வெளியான, 'தி ஷௌரியா அன்பவுண்ட்' என்ற நூல், எந்தச் சம்பவம் பற்றியது?



அ. 2001 இந்திய நாடாளுமன்ற தாக்குதல் ☑

ஆ. 2005 தில்லி குண்டு வெடிப்பு

இ. 2008 மும்பைத் தாக்குதல்

ஈ. 2016 பதன்கோட் தாக்குதல்

- மக்களவை சபாநாயகர் ஓம் பிர்லா, இந்திய நாடாளுமன்ற தாக்குதலின் 19ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு நூலொன்றை வெளியிட்டார். 2001ஆம் ஆண்டு நடந்த இச்சம்பவம் குறித்து, 'The Shaurya Unbound' (ஆங்கிலப்பதிப்பு) மற்றும் 'Samundar Samawe Boond Mein' (ஹிந்திப்பதிப்பு) என்ற நூல் வெளியிடப்பட்டது. இந்தச் சம்பவத்தின்போது ஐந்து பயங்கரவாதிகள் உட்பட 14 பேர் உயிரிழந்தனர்.

8.இந்தியாவின் குடியரசு நாள் அணிவகுப்பில் முதன்மை விருந்தினராக கலந்துகொள்ளவுள்ள நாட்டின் பிரதமர் யார்?

அ. யுனைடெட் ஸ்டேட்ஸ்

ஆ. ஆஸ்திரேலியா

இ. யுனைடெட் கிங்டம் ☑

ஈ. நியூசிலாந்து

- புதுதில்லியில் 2021 ஜன.26 அன்று நடைபெறவுள்ள இந்தியாவின் குடியரசு நாள் கொண்டாட்டங்களில் பிரதமர் மோடியின் பிரதம விருந்தினராக பிரிட்டன் பிரதமர் போரிஸ் ஜான்சன் கலந்துகொள்ளவுள்ளார். இதன்மூலம், 1993'இல் ஜான் மேஜருக்குப் பிறகு கொண்டாட்டங்களில் கலந்து கொண்ட இரண்டாவது இங்கிலாந்து பிரதமரானார் போரிஸ் ஜான்சன். மேலும், இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, அடுத்த ஆண்டு இங்கிலாந்தில் நடத்தப்படும் G7 உச்சிமாநாட்டில் பங்கேற்குமாறும் போரிஸ் ஜான்சன் அழைப்பு விடுத்துள்ளார்.

9.தனது அரசியலமைப்பில் காலநிலை இலக்குகளைச் சேர்க்க வாக்கெடுப்பு அறிவித்துள்ள நாடு எது?

அ. பிரான்ஸ் ☑

ஆ. யுனைடெட் கிங்டம்

இ. நியூசிலாந்து

ஈ. ஜெர்மனி

- பிரெஞ்சு அதிபர் இம்மானுவேல் மக்ரோன் காலநிலை மாற்றத்திற்கு எதிரான முயற்சிகளையும் சுற்றுச் சூழலைப் பாதுகாக்க வேண்டியதன் அவசியத்தையும் பிரெஞ்சு அரசியலமைப்பில் இணைப்பதற்கான வாக்கெடுப்பு ஒன்றை அறிவித்துள்ளார். முன்னதாக, இம்மானுவேல் மக்ரோன் உள்ளிட்ட ஐரோப்பிய

ஒன்றிய தலைவர்கள், 2030'க்குள் 1990 மட்டங்களுடன் ஒப்பிடும்போது குறைந்தது 55 சதவீதத்தை அடைய ஒப்புக்கொண்டனர்.

10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, இந்திய பன்னாட்டு அறிவியல் விழாவின் விளம்பர நடவடிக்கைகளின் பெயர் என்ன?

அ. விக்யான் யாத்ரா ☑

ஆ. விக்யான் பரிக்ஷித்

இ. விக்யான் சம்மேளன்

ஈ. விக்யான் விழா

❖ இந்திய பன்னாட்டு அறிவியல் விழாவின் விளம்பர நடவடிக்கைகளின் பெயர் 'விக்யான் யாத்திரை' ஆகும். மக்களிடையே அறிவியல் கலாச்சாரத்தை மேம்படுத்துவதற்காக, இந்த விழாவின் ஒருபகுதியாக நடமாடும் அறிவியல் கண்காட்சி வாகனங்கள் பல நகரங்களில் உலாவரும். COVID–19 தொற்றால், இந்திய பன்னாட்டு அறிவியல் விழாவின் ஆறாவது பதிப்பானது டிசம்பர் 22 முதல் 25 வரை மெய்நிகர் முறையில் நடத்தப்படவுள்ளது.

தமிழ்நாடு நடப்பு நிகழ்வுகள்

❖ தமிழ்நாட்டில் 'அம்மா மினி கிளினிக்' திட்டத்தை மாண்புமிகு முதலமைச்சர் எடப்பாடி க. பழனிசாமி தொடங்கிவைத்தார். காய்ச்சல், சளி போன்ற பல்வேறு நோய்களுக்கு சிகிச்சையளிக்கும் வகையில் இந்தத் திட்டம் தொடங்கப்பட்டுள்ளது. சென்னை இராயபுரம் ஷேக் மேஸ்திரி தெருவில், முதலாவது 'மினி கிளினிக்'கை அவர் தொடங்கிவைத்தார்.

❖ திருவண்ணாமலை மாவட்டம் தண்டராம்பட்டு வட்டம் கீழ்ராவந்தவாடி கிராமத்தில் உள்ள சிற்பக்குளம் (அம்மாகுளம்); அரியலூர் மாவட்டம் உடையார்பாளையம் வட்டத்தின் அழகர்மலை கிராமத்தில் உள்ள யானைச்சிற்பம் ஆகிய இரண்டு புராதனச்சின்னங்களும் பாதுகாக்கப்பட்ட புராதனச்சின்னங்களாக தமிழ்நாடு அரசால் அறிவிக்கப்பட்டுள்ளன. தமிழ்நாட்டில் 92 பாதுகாக்கப்பட்ட புராதனச்சின்னங்கள் தொல்லியல்துறையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது.

❖ வாடகையுந்து சேவை நிறுவனமான ஓலா, எடெர்கோ என்னும் நிறுவனத்துடன் இணைந்து உலகின் மிகப்பெரிய மின்–ஸ்கூட்டர் தயாரிப்பு தொழிற்சாலையை ஒசூரில் அமைக்க திட்டமிட்டுள்ளது. அதன்படி, கிருஷ்ணகிரி மாவட்டம் ஒசூரில், ₹2354 கோடி மதிப்பில் புதிய தொழிற்சாலையை அமைப்பதற்கான ஒப்பந்தம், மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் க பழனிசாமி முன்னிலையில் கையெழுத்தானது.

நடப்பு நிகழ்வுகள்

1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற சான் இசிட்ரோ இயக்கத்துடன் தொடர்புடைய நாடு எது?

அ. இத்தாலி

ஆ. கியூபா ☑

இ. ஜெர்மனி

ஈ. பிரான்ஸ்

- கடந்த 2018ஆம் ஆண்டில், கலைஞர்கள், ஊடகவியலாளர்கள் மற்றும் ஆர்வலர்கள் கியூபாவின் சான் இசிட்ரோ பிராந்தியத்தில் கூடி, கலாச்சார செயற்பாடுகளை தணிக்கை செய்வது குறித்த அந்த நாட்டின் விதிகளுக்கு எதிர்ப்புத் தெரிவித்தனர். எனவே, இது மொவிமியான்டோ சான் ஐசிட்ரோ அல்லது சான் இசிட்ரோ இயக்கம் (MSI) என்று அறியப்பட்டது.
- இந்த ஆண்டு நவம்பரில் MSI உறுப்பினர் ஒருவர் கைது செய்யப்பட்டதை அடுத்து, அதன் உறுப்பினர்கள் உண்ணாவிரதம் மேற்கொண்டனர். பின்னர் அவர்கள் கைதுசெய்யப்பட்டனர். கியூபா அரசாங்கம் அந்தப் போராட்டக்காரர்களை ஏகாதிபத்தியத்தின் முகவர்கள் என அழைக்கிறது.

2.அண்மைச்செய்திகளில் இடம்பெற்ற, பாயிண்ட் காலிமர் பறவைகள் மற்றும் வனவுயிரிகள் சரணாலயம் அமைந்துள்ள மாநிலம் எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. ஒடிசா

- தமிழ்நாட்டின் கீழைக்கடற்கரையில் அமைந்துள்ள கோடியக்கரை (காலிமர் முனை) பறவைகள் மற்றும் வனவுயிரிகள் சரணாலயத்திற்கு பட்டைத்தலை வாத்துகள் அண்மையில் வலசைவந்தன. இந்தப் பறவைகள் தீவிர வானிலையிலும் அதீத உயரத்திலும் பறக்கும் திறன் பெற்றவையாகும். அவை திபெத், மத்திய சீனா மற்றும் மங்கோலியாவிலிருந்து ஆயிரக்கணக்கான மைல்கள் பறந்து இங்கு வந்திருக்கக் கூடும். அவை பொதுவாக குளிர்காலத்தில் இந்தியாவுக்கு இடம்பெயர்கின்றன.

3.ஏழை மக்களுக்கு அடிப்படை மருத்துவ சிகிச்சையை வழங்குவதற்காக 2000 மினி கிளினிக்குகள் அமைக்கும் திட்டத்தை தொடங்கியுள்ள அரசு எது?

அ. தமிழ்நாடு ☑

ஆ. கேரளா

இ. ஆந்திர பிரதேசம்

ஈ. ஒடிசா

❖ மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் எடப்பாடி க பழனிசாமி சமீபத்தில் மாநிலம் முழுவதும் 2,000 மினி கிளினிக்குகள் அமைக்கும் திட்டத்தை தொடங்கிவைத்தார். மறைந்த முன்னாள் முதலமைச்சர் ஜெ ஜெயலலிதாவின் நினைவில் அவை 'அம்மா மினி கிளினிக்குகள்' என அழைக்கப்படும். கிளினிக்குகள், ஏழை மற்றும் நலிவடைந்தோருக்கு அத்தியாவசிய சுகாதார சேவைகளை வழங்குவதை நோக்கமாகக் கொண்டுள்ளன. இங்கு சிறு சிறு வியாதிகளுக்கு சிகிச்சையளிக்கப்படும். இந்த நடவடிக்கையின்மூலம் அரசு மருத்துவமனைகளின் சுமை ஓரளவுக்குக் குறையும்.

4.கொரோனா வைரஸால் பாதிக்கப்பட்ட முதல் வனவுயிரியான உட்டா மிங்க் சார்ந்த நாடு எது?

அ. ஜப்பான்

ஆ. சீனா

இ. ஐக்கிய அமெரிக்க நாடுகள் ☑

ஈ. ஆஸ்திரேலியா

❖ அமெரிக்காவின் வேளாண்துறை சமீபத்தில் 'உட்டா மிங்க்' என்னும் ஒரு வனவுயிரில் கொரோனா வைரஸின் முதல் பாதிப்பை உறுதிப்படுத்தியுள்ளது. முன்னதாக, வைரஸால் பாதிக்கப்பட்ட வீட்டு மிங்குகளை கொல்ல டென்மார்க் முடிவுசெய்தது. உயிரியல் பூங்காக்களில் உள்ள புலிகள் மற்றும் வீட்டு பூனைகள் மற்றும் நாய்களிலும் COVID–19 வைரஸ் தொற்று காணப்பட்டது. ஆனால் இது, COVID–19 தொற்றுநோயால் பாதிக்கப்பட்ட முதல் வனத்தை இருப்பிடமாகக்கொண்ட விலங்கு ஆகும்.

5. வங்காள விரிகுடா முழுவதும் கீழ்க்காணும் எந்த வகை அலை நகர்ந்து தமிழ்நாடு மற்றும் கேரளாவை குறிவைத்து மழைபொழிகிறது?



அ. மேற்குத்திசை அலைகள்

ஆ. கீழ்த்திசை அலைகள் ☑

இ. ராஸ்பி அலைகள்

ஈ. ஜெட் காற்றோட்டை

❖ இந்திய வானிலை ஆய்வு மையத்தின் சமீபத்திய அறிவிப்பின்படி, பரவலான மழை அல்லது இடியுடன் கூடிய மழை அல்லது இடியுடன் கூடிய மழையானது தமிழ்நாடு, கேரளா மற்றும் தெற்கு தீபகற்பத்தில் உள்ள பகுதிகளில் மீண்டும் பொழியவுள்ளது. வங்காள விரிகுடா முழுவதும் வெகுவேகமாக நகரும் கீழ்த்திசை அலைகள் பொதுவாக தெற்கு தீபகற்ப பகுதியை குறிவைக்கின்றன. வெப்பமண்டல அலை அல்லது வெப்பமண்டல கீழ்த்திசை அலை என்றும் அழைக்கப்படுகின்ற இது, ஒப்பீட்டளவில் குறைந்த காற்றழுத்தத்தின் ஒருபகுதியாகும். இது, வெப்பமண்டலத்தின் குறுக்கே கிழக்கிலிருந்து மேற்கு நோக்கி நகர்ந்து மேகமூட்டம் மற்றும் இடியுடன் கூடிய கனமழையை ஏற்படுத்துகிறது.

6. எஃகு துறையில், நடப்பாண்டிற்கான (2020) தங்கமயில் சுற்றுச்சூழல் மேலாண்மை விருது பெற்ற நிறுவனம் எது?

அ. SAIL ☑ ஆ. RINL

இ. NMDC ஈ. TATA Steel

सेल SAIL

❖ SAIL எனப்படும் இந்தியா எஃகு ஆணையம், நடப்பாண்டுக்கான (2020) தங்கமயில் சுற்றுச்சூழல் மேலாண்மை விருதை இயக்குநர்கள் வாரியத்திடமிருந்து பெற்றுள்ளது. இந்த விருதை தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக SAIL நிறுவனம் வென்றுள்ளது. SAIL என்பது புது தில்லியை தலைமையாகக் கொண்ட இந்திய அரசுக்கு சொந்தமான எஃகு தயாரிக்கும் நிறுவனமாகும். சுற்றுச்சூழலைப் பாதுகாக்க அந்நிறுவனம் மேற்கொண்ட பல்வேறு நடவடிக்கைகள் இவ்விருதின்மூலம் அங்கீகரிக்கப்பட்டுள்ளன.

7.கீழ்க்காணும் எம்மாநிலத்தில் அமையவுள்ள நாட்டின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் பூங்காவுக்கு பிரதமர் நரேந்திர மோடி அண்மையில் அடிக்கல் நாட்டினார்?

அ. தமிழ்நாடு

ஆ. இராஜஸ்தான்

இ. குஜராத் ☑

ஈ. பஞ்சாப்

❖ பிரதமர் நரேந்திர மோடி குஜராத்திற்கு விஜயம் செய்து பல்வேறு வளர்ச்சித் திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். கட்ச் மாவட்டத்தில் அமையவுள்ள புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பூங்காவானது கட்டி முடிக்கப்பட் –டவுடன் நாட்டின் மிகப்பெரிய புதுப்பிக்கத்தக்க ஆற்றல் உற்பத்தி பூங்காவாக இருக்கும். ஒரு முழுமையான தானியங்கி பால் பதப்படுத்துதல் மற்றும் பொதி ஆலை மற்றும் கச்சின் மாண்ட்வியில் ஒரு கடல்நீரைக் குடிநீராக்கும் ஆலைக்கும் அவர் அப்போது அடிக்கல் நாட்டினார்.

8. சூரத்தில் சமீபத்தில் பணியமர்த்தப்பட்ட C–454 என்பது எந்த வகையான இராணுவ வாகனமாகும்?

அ. இடைமறிப்புப் படகு ☑

ஆ. கடற்புற ஆளில்லா வானூர்தி

இ. கரையோர ரோந்துக் கப்பல்

ஈ. மெத்தூர்தி

❖ குஜராத் மாநிலத்தின் சூரத்தில் உள்ள ஹசிரா துறைமுகத்தில், இந்திய கடலோர காவல்படையின் C–454 என்ற உள்நாட்டில் கட்டப்பட்ட இடைமறிப்புப்படகு பணியமர்த்தப்பட்டது. இந்த இடைமறிப்புப்படகு ஹசிராவில் உள்ள L&T கப்பல்கட்டும் நிறுவனத்தால் கட்டப்பட்டதாகும். ஆழமற்ற நீரில் அதிவேகத்தில் இயங்கக்கூடியதாகும் இந்தப்படகு. இந்தப் படகில் அதிநவீன வழிசெலுத்துதல் மற்றும் தகவல் தொடர்பு சாதனங்கள் பொருத்தப்பட்டுள்ளன.

9.இந்தியா போஸ்ட் பேமெண்ட்ஸ் வங்கி தொடங்கியுள்ள புதிய கட்டணஞ்செலுத்த பயன்படும் செயலியின் பெயர் என்ன?

அ. Post Pay

ஆ. Dak Pay ☑

இ. IPPB Pay

ஈ. Dak Digital

- அஞ்சல் துறை மற்றும் இந்திய அஞ்சல் துறை வங்கி, டிஜிட்டல் முறையில் பணம் செலுத்த 'டாக் பே' என்ற புதிய செயலியை அறிமுகப்படுத்தியுள்ளது. நாடு முழுவதும் டிஜிட்டல் பணப்பரிமாற்ற சேவையை அளிக்கும் முயற்சியின் ஒருபகுதியாக, இந்த 'டாக் பே' செயலி தொடங்கப்பட்டுள்ளது. 'டாக் பே' செயலி டிஜிட்டல் முறையில் பணம் செலுத்தும் சேவையை மட்டும் வழங்கவில்லை, நாடு முழுவதுமுள்ள தபால் துறை நெட்வொர்க் மூலம் இந்திய அஞ்சல் வங்கியின் டிஜிட்டல் வங்கி சேவைகளையும் வழங்குகிறது.

10.நிதி நிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக்கவுன்சில் கூட்டத்திற்கு தலைமைதாங்கியவர் யார்?

அ. பிரதமர்

ஆ. நிதியமைச்சர் ☑

இ. ரிசர்வ் வங்கியின் ஆளுநர்

ஈ. NITI ஆயோக் தலைமைச் செயல் அதிகாரி

- மத்திய நிதி மற்றும் பெருநிறுவன விவகாரங்களுக்கான அமைச்சர் நிர்மலா சீதாராமன் நிதி நிலைத் தன்மை மற்றும் மேம்பாட்டுக் கவுன்சிலின் 22ஆவது கூட்டத்திற்கு தலைமைதாங்கினார். நாட்டின் தற்போதைய உலகளாவிய மற்றும் உள்நாட்டு பொருளாதார நிலைமை மற்றும் நிதி நிலைத்தன்மை குறித்து ஆய்வுசெய்தார்.

- மத்திய நிதியமைச்சர், 2010ஆம் ஆண்டில் அமைக்கப்பட்ட ஒரு தன்னாட்சி ஒழுங்குமுறை அமைப்பான நிதிநிலைத்தன்மை மற்றும் மேம்பாட்டுக்கவுன்சிலின் தலைவராக உள்ளார். இந்திய ரிசர்வ் வங்கியின் ஆளுநர், நிதி செயலாளர், தலைமை பொருளாதார ஆலோசகர், SEBI, IRDAI, PFRDA, IBBI ஆகியவற்றை தவிர தேவையான வேறு நபர்களை நிதியமைச்சர் இக்கவுன்சிலில் சேர்க்கலாம்.

நடப்பு நிகழ்வுகள்

1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, T–பைபர் திட்டத்துடன் தொடர்புடைய மாநிலம் எது?

அ. தமிழ்நாடு

ஆ. தெலுங்கானா ☑

இ. திரிபுரா

ஈ. ஆந்திர பிரதேசம்

- T–பைபர், தெலுங்கானா பைபர் வலையமைப்புத் திட்டம் என்பது மாநில அளவிலான திட்டமாகும்; அது, ஒளியிழை வலையமைப்பை நிறுவுவதையும், தெலுங்கானாவில் அதிவேக பிராட்பேண்ட் சேவையை வழங்குவதையும் நோக்கமாகக்கொண்டுள்ளது. அண்மையில், தெலுங்கானா மாநில அரசு, T–பைபர் திட்டத்தை, 'முக்கிய பொது நோக்கமுடைய திட்டம்' என்று அறிவித்தது. இதன்பொருள், இந்தத்திட்டத்தை செயல்படுத்த மாநிலத்தின் பல்வேறு துறைகளிடமிருந்து அனுமதிபெறவேண்டியதில்லை.

2.மின்சாரத் துறையில் தகவல்கள் பரிமாற்றத்திற்காக இந்தியாவிற்கும் எந்த நாட்டிற்கும் இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்தது?

அ. பிரான்ஸ்

ஆ. அமெரிக்கா ☑

இ. ஐக்கிய அரபு அமீரகம்

ஈ. ஜெர்மனி

- இந்தியாவும், அமெரிக்காவும் (USA) மின்சாரத்துறையில் இருதரப்பு நலன்குறித்த தகவல்களை பரிமாறிக் கொள்வதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. இதன் மூலம், இந்தியாவின் மத்திய மின்சார ஒழுங்குமுறை ஆணையமும், அமெரிக்காவின் எரிசக்தி ஒழுங்கு முறை ஆணையமும் தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கான ஒப்பந்தத்தில் கையெழுத்திடுவார்கள்.
- மொத்த விலை மின்சார சந்தையை ஊக்குவிப்பதற்காகவும், மின்சார தொகுப்பின் நம்பகத்தன்மையை அதிகரிப்பதற்காகவுமான ஒழுங்குமுறை மற்றும் கொள்கைக் கட்டமைப்பை மேம்படுத்துவதற்கு, இந்தப் புரிந்துணர்வு ஒப்பந்தம் வழிவகுக்கும்.

3. கருப்பு மெல்லோட்டு ஆமைகளின் IUCN நிலை என்ன?

அ. மிகவும் அருகிவிட்ட இனம்

ஆ. காடுகளில் முற்றழிவுற்ற இனம் ☑

இ. தீவாய்ப்பு கவலை குறைந்த இனம்

ஈ. அழிவாய்ப்பு நிலையிலுள்ள இனம்

- அஸ்ஸாம் மாநிலத்தில் உள்ள ஒரு கோவிலில் வளர்க்கப்பட்ட 22 கருப்பு மெல்லலோட்டு ஆமைகளின் குஞ்சுகள் அண்மையில் காசிரங்கா தேசிய பூங்கா மற்றும் புலிகள் காப்பகத்தின் அருகே ஈரநிலங்களில்

விடப்பட்டன. இயற்கை பாதுகாப்புக்கான பன்னாட்டு ஒன்றியத்தின் (IUCN) கூற்றுப்படி, இந்த ஆமைகள் 'காடுகளில் முற்றழிந்த இனம்' எனக்கருதப்படுகின்றன. அவற்றில் மிகக்குறைந்த எண்ணிக்கையானது சில கோவில் குளங்களில் (பெரும்பாலும் அஸ்ஸாமில்) உள்ளன.

4.நாட்டின் கரும்பு விவசாயிகளுக்கு எவ்வளவு நிதியுதவி வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது?

அ. ரூ.1000 கோடி

ஆ. ரூ.2000 கோடி

இ. ரூ.3000 கோடி

ஈ. ரூ.3500 கோடி ☑

❖ கரும்பு விவசாயிகளுக்கு ₹3500 கோடி நிதியுதவி வழங்க பொருளாதார விவகாரங்களுக்கான மத்திய அமைச்சரவைக்குழு ஒப்புதல் அளித்துள்ளது. நாட்டில் தற்போது, ஐந்து கோடி கரும்பு விவசாயிகளும், அவர்களைச்சார்ந்தவர்களும் உள்ளனர். இந்நிதி, சர்க்கரை ஆலைகள் சார்பில், கரும்பு உழவர்களின் வங்கிக்கணக்கில் நேரடியாக செலுத்தப்படும். நடுவணரசின் இம்முடிவு, 5 கோடி கரும்பு உழவர்கட்கும், அவர்களைச்சார்ந்துள்ளவர்களுக்கும், சர்க்கரை ஆலை பணியாளர்களுக்கும் பயனளிக்கும்.

5. 2020 நிலவரப்படி, இந்தியாவில் மிக சமீபத்திய அலைக்கற்றை ஏலம் எப்போது நடைபெற்றது?

அ. 2015

ஆ. 2016 ☑

இ. 2017

ஈ. 2018

❖ மத்திய தொலைத்தொடர்புத்துறையின் அலைக்கற்றை (spectrum) ஏலத்திட்டத்துக்கு, நடுவண் அமைச்ச–ரவை ஒப்புதல் அளித்துள்ளது. மொத்தம் 2251.25 MHz அலைவரிசை ₹3,92,332.70 கோடி மதிப்பில் வழங்கப்படுகிறது. இந்தியாவில் மிக சமீபத்திய அலைக்கற்றை ஏலமானது கடந்த 2016ஆம் ஆண்டில் நடைபெற்றது; அதில், ₹65,789.12 கோடி வருவாயை இந்திய அரசாங்கம் திரட்டியது.

6. 2020 மனிதவள மேம்பாட்டு குறியீட்டில் கீழ்க்காணும் எந்தப்புதிய அளவுரு இணைக்கப்பட்டுள்ளது?

அ. COVID தயார்நிலை

ஆ. CO_2 உமிழ்வு மற்றும் பொருண்ம தடம் ☑

இ. பணவியல் கொள்கை மற்றும் பணவீக்கம்

ஈ. கொள்ளைநோய் தயார்நிலை மற்றும் தடுப்பூசி போட்டிருத்தல்

❖ நடப்பாண்டின் (2020) மனிதவள மேம்பாட்டுக் குறியீட்டை ஐநா வளர்ச்சித்திட்டம் வெளியிட்டுள்ளது. இதன்படி, 189 நாடுகளில் இந்தியா 131ஆவது இடத்தில் உள்ளது. கடந்த ஆண்டு, இந்தியா 130ஆவது இடத்திலிருந்தது. ஆயுட்காலம், கல்வி மற்றும் தனிநபர் வருமானம் ஆகிய மூன்று அளவுருக்களைக் கொண்டு இந்தக் குறியீடு அளவிடப்படுகிறது.

- நடப்பாண்டின் (2020) குறியீடானது CO_2 உமிழ்வு மற்றும் பொருண்ம தடம் என்ற புதிய அளவுருவை இணைத்து, உலகுசார் மனிதவள மேம்பாட்டு குறியீடாக (PHDI) அறிமுகப்படுத்தியுள்ளது.

7.இமயமலை குளிர் பாலைவன மண்டலத்தில் முதன்முறையாக காணப்பட்ட விலங்கு எது?

அ. வெளிமான்

ஆ. கானமயில்

இ. இமயமலை வரையாடு ☑

ஈ. சோலைமந்தி

- இமயமலையின் குளிர்ச்சியான பாலைவன மண்டலத்தில், ஹிமாச்சல பிரதேச மாநிலத்தின் ஸ்பிதியில் இமயமலை வரையாடு முதன்முறையாக காணப்பட்டுள்ளது. தாவர உண்ணிகளான இவை 2000 மீ – 4000 மீ உயரத்தில் வாழ்கின்றன. நீண்ட காதுகளுடன்கூடிய இவை ஆடுபோன்ற தோற்றத்தைக் கொண்டுள்ளன. முன் கால்களை நீட்டிக்கொண்டு நிற்கும் பழக்கமுடையவை இவற்றுக்கு உண்டு.

8. கீழ்க்காணும் எந்த அமைப்பால், "Young Champions of the Earth" பரிசு வழங்கப்படுகிறது?

அ. UNEP ☑

ஆ. UNESCO

இ. UNFCCC

ஈ. NASA

UNEP

- "புவியின் இளம் சாம்பியன்கள்" பரிசானது ஒவ்வோர் ஆண்டும் ஐநா சுற்றுச்சூழல் திட்டத்தால் (UNEP), நீடித்த சுற்றுச்சூழல் மாற்றத்திற்கான யோசனைகளை வழங்கும் 7 அறிவியலாளர்கள், தொழில்முனை –வோர், பொறியாளர்கள் மற்றும் ஆர்வலர்களுக்கு வழங்கப்படுகிறது. பரிசுபெறும் ஒவ்வொருவருக்கும் அவர்களின் யோசனைகளின் வளர்ச்சிக்கான தொடக்க நிதியாக $10,000 பரிசுத்தொகை கிடைக்கும்.

9.கீழ்க்காணும் எந்த வரலாற்று நிகழ்வை நினைவுகூரும் விதமாக, 'ஸ்வர்னிம் விஜய் மஷால்', இந்தியப் பிரதமரால் ஏற்றப்பட்டது?

அ. இந்தியா – பாகிஸ்தான் போர் ☑

ஆ. இரண்டாம் உலகப்போர்

இ. இந்திய விடுதலை

ஈ. இந்தியா – சீனா போர்

- இந்தியா–பாகிஸ்தான் போரின் பொன்விழா ஆண்டு கொண்டாட்டம் தொடங்குவதை முன்னிட்டு, தில்லியில் உள்ள தேசிய போர் நினைவிடத்தில், பொன்விழா வெற்றிஜோதியை, பிரதமர் மோடி ஏற்றி வைத்தார். 1971ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் இந்தியா–பாகிஸ்தான் இடையே நடந்த போரில், பாகிஸ்தான் இராணுவத்தை வீழ்த்தி, இந்திய இராணுவம் வரலாற்றுச் சிறப்புமிக்க வெற்றியை பெற்றது. அது, வங்காளதேசம் என்ற நாடு உருவாக வழிவகுத்தது.

- இந்தியா – பாகிஸ்தான் போரின் ஐம்பதாவது பொன்விழா வெற்றி ஆண்டை, இந்தியா, டிசம்பர் 16 முதல் கொண்டாடுகிறது. இதை முன்னிட்டு, நாடு முழுவதும் பல நிகழ்ச்சிகள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

10. FIFA சிறந்த வீரர் விருதை வென்ற இராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி சார்ந்த நாடு எது?

அ. ஸ்பெயின்

ஆ. குரோஷியா

இ. போலந்து ☑

ஈ. பிரேசில்

- போலந்து தேசிய கால்பந்து அணியின் அணித் தலைவரான இராபர்ட் லெவாண்டோவ்ஸ்கி, FIFA'இன் நடப்பாண்டுக்கான (2020) சிறந்த வீரர் விருதை வென்றுள்ளார். முந்தைய வெற்றியாளர்களான கிறிஸ்டியானோ ரொனால்டோ மற்றும் லியோனல் மெஸ்ஸி ஆகியோரை வீழ்த்தி அவர் இவ்விருதைப் பெற்றுள்ளார். கடந்த அக்டோபரில், 2019–20'க்கான UEFA ஆண்டின் சிறந்த வீரராகவும் அவர் தேர்வு செய்யப்பட்டார். சிறந்த வீராங்கனை விருதை ஆங்கில வீராங்கனை லூசி பிரான்ஸ் வென்றார்.

நடப்பு நிகழ்வுகள்

1.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, NERPSIP என்ற வடகிழக்குப் பிராந்திய மின்சார அமைப்பின் மேம்பாட்டுத் திட்டத்தை செயல்படுத்துகிற அமைப்பு எது?

அ. REC

ஆ. POWERGRID ☑

இ. NTPC

ஈ. ONGC

❖ வடகிழக்குப் பிராந்திய மின்சார அமைப்பின் மேம்பாட்டுத் திட்டத்திற்கான ₹6700 கோடி மதிப்பிலான திருத்தப்பட்ட செலவு மதிப்பீட்டுக்கு பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு ஒப்புதல் அளித்துள்ளது. இதன்மூலம் அஸ்ஸாம், மணிப்பூர், மேகாலயா, மிசோரம், நாகாலாந்து, திரிபுரா ஆகிய ஆறு வடகிழக்கு மாநிலங்களில் மின்சாரப்பகிர்மானமும், விநியோகமும் வலுவடையும். மேற்கண்ட 6 மாநிலங்களுடன் இணைந்து, மத்திய மின்சக்தி அமைச்சகத்தின்கீழ் இயங்கும் பொதுத்துறை நிறுவன –மான பவர்கிரிட் மூலம் இத்திட்டம் செயல்படுத்தப்படுகிறது.

2. 'பிராண்ட் இந்தியா'வை முன்னிலைப்படுத்துவதற்காக கீழ்க்காணும் எந்த வகை வலைத்தளத்தை மத்திய வெளியுறவு அமைச்சகம் அறிமுகப்படுத்தியுள்ளது?

அ. பொருளாதார செயலாண்மைத் திறன் வலைத்தளம் ☑

ஆ. பயங்கரவாத எதிர்ப்பு வலைத்தளம்

இ. சைபர் செயலாண்மைத் திறன் வலைத்தளம்

ஈ. கலாச்சார வளர்ச்சி வலைத்தளம்

❖ பன்னாட்டு முதலீட்டாளர்களுக்கு, 'பிராண்ட் இந்தியா'வை வெளிச்சம்போட்டுக்காட்டுவதற்காக, மத்திய வெளியுறவு அமைச்சகமானது சமீபத்தில் ஒரு பொருளாதார செயலாண்மைத்திறன் வலைத்தளத்தை அறிமுகப்படுத்தியது. இது, வெளியுறவு அமைச்சகத்தின் பொருளாதார செயலாண்மைத்திறன் பிரிவால் நிர்வகிக்கப்படுகிறது. இந்தியாவின் பொருளாதார, பிராந்திய மற்றும் மாநில வாரியான போக்குகள், மாநில / யூனியன் பிரதேசங்களின் பொருளாதார மற்றும் கொள்கை சுயவிவரங்களையும் இவ்வலைத் தளம் காண்பிக்கும். இது, APEDA போன்ற முகமைகள்மூலம் இந்திய வணிகங்களையும், ஆர்வமுள்ள முதலீட்டாளர்களையும் இணைக்கிறது.

3. ISO சான்றிதழ்பெற்ற முதல் இந்திய விலங்கியல் பூங்கா எது?

அ. 'பேரறிஞர்' அண்ணா விலங்கியல் பூங்கா

ஆ. நேரு விலங்கியல் பூங்கா ☑

இ. திருவனந்தபுரம் உயிரியல் பூங்கா

ஈ. அலிபூர் தேசிய பூங்கா

❖ இங்கிலாந்தைச் சார்ந்த அங்கீகார அமைப்பான ASCB'இன் மதீப்பிட்டைத் தொடர்ந்து ஹைதராபாத்தில் அமைந்துள்ள நேரு விலங்கியல் பூங்காவுக்கு அண்மையில் ISO சான்றிதழ் வழங்கப்பட்டது. ISO 9001: 2015 தர மேலாண்மை தரச் சான்றிதழைப் பெற்ற இந்தியாவின் முதல் விலங்கியல் பூங்காவாக இந்தப் பூங்கா அமைந்துள்ளது. சுகாதாரம், உணவுப்பதப்படுத்துதல், விலங்கு இனப்பெருக்கம் போன்றவற்றில் பின்பற்றப்பட்ட தரநிலைகள் மதிப்பீடு செய்யப்பட்டன.

4. 'PHDI' என்ற புதிய அளவுருவை கணக்கில் எடுத்துக்கொண்டால், மனிதவள மேம்பாட்டுக்குறியீட்டில் இந்தியாவின் தரநிலை என்ன?

அ. 101

ஆ. 108

இ. 121

ஈ. 123 ☑

❖ ஐநா வளர்ச்சித்திட்டம் HDI அல்லது PHDI எனப்படும் புதிய அளவுருவை அறிமுகப்படுத்தியது. ஒவ்வொரு நாட்டின் தனிநபர் CO_2 உமிழ்வு மற்றும் அதன் பொருள் தடம் ஆகியவற்றால் ஏற்படும் தாக்கத்தை இது மதிப்பிடுகிறது. மனிதவள மேம்பாட்டுக்குறியீட்டில் (HDI) இந்தியா 131ஆவது இடத்தில் உள்ளது. இந்த அளவுருவை கருத்தில்கொள்ளும்போது, இந்தியா, இப்பட்டியலில் 123ஆவது இடத்தில் உள்ளது. இந்தப் பட்டியலில் அயர்லாந்து முதலிடத்தில் உள்ளது.

5.சிலாஹட்டி–ஹல்திபாரி என்பது எவ்விரு நாடுகளுக்கு இடையிலான இரயில் வழித்தடமாகும்?

அ. இந்தியா – பாகிஸ்தான்

ஆ. இந்தியா – வங்காளதேசம் ☑

இ. இந்தியா – பூடான்

ஈ. இந்தியா – நேபாளம்

❖ இந்தியாவுக்கும் வங்காளதேசத்துக்கும் இடையிலான 1965'க்கு முந்தைய இரயில்தட இணைப்பான சிலாஹட்டி–ஹல்திபாரி இரயில் இணைப்பு தற்போது திறக்கப்பட்டுள்ளது. இருநாடுகளுக்கும் இடையி–லான இரயில் இணைப்பை மேம்படுத்துவதற்காக, 1965'க்கு முந்தைய 6 இரயில் பாதைகள் மீண்டும் திறக்கப்படும் என முடிவுசெய்யப்பட்டது. சிலாஹட்டி–ஹல்திபாரி இரயில் இணைப்பு திறக்கப்பட்டுள்ள நிலையில், இந்த ஆறு வழித்தடங்களில் ஐந்து வழித்தடங்கள் இந்தியாவிற்கும் வங்காளதேசத்துக்கும் இடையே இயக்கப்படுகின்றன.

6. 2020 மனித சுதந்திரக் குறியீட்டில் இந்தியா அடைந்துள்ள தரநிலை என்ன?

அ. 110

ஆ. 111 ☑

இ. 112

ஈ. 113



❖ நடப்பாண்டின் (2020) மனித சுதந்திரக் குறியீடை அமெரிக்காவின் கேடோ நிறுவனமும் கனடாவின் பிரேசர் நிறுவனமும் இணைந்து வெளியிட்டுள்ளன. இது உலகின் மனித சுதந்திரத்தின் நிலையை அளவிடுகிறது. இந்தக் குறியீட்டில் இடம்பெற்ற 162 நாடுகளில், இந்தியா 111ஆவது இடத்தில் உள்ளது. தனிப்பட்ட சுதந்திரத்தின் அடிப்படையில் 110ஆவது இடத்திலும், பொருளாதார சுதந்திரத்தில் 105ஆவது இடத்திலும் இந்தியா உள்ளது. ஒட்டுமொத்த சராசரி மதிப்பெண்ணான பத்துக்கு 6.43 இந்தியாவுக்கு வழங்கப்பட்டது. உலகின் சராசரி மதிப்பெண் 6.93 ஆகும்.

7.அண்மையில் CMS–01 என்ற தகவல் தொடர்பு செயற்கைக்கோளை ஏவிய அமைப்பு எது?

அ. NASA

ஆ. ISRO ☑

இ. JAXA

ஈ. ROSCOSMOS

❖ இந்திய தகவல்தொடர்பு செயற்கைக்கோளான CMS–01'ஐ இந்திய விண்வெளி ஆய்வுமையம் (ISRO) வெற்றிகரமாக ஏவியது. ஸ்ரீஹரிகோட்டாவில் அமைந்துள்ள சதீஷ் தவான் விண்வெளி மையத்தின் SHAR ஏவுதளத்திலிருந்து PSLV C–50 என்ற ஏவுகலத்தில் இந்தச் செயற்கைக்கோள் செலுத்தப்பட்டது. PSLV–C50 என்பது PSLV'இன் 52ஆவது பயணமாகும். இம்முறையோடு, SHAR'இலிருந்து 77ஆவது முறையாக செயற்கைக்கோள் ஏவப்பட்டுள்ளது.

8.சீன விண்கலமான சாங் 5 புவிக்குத் திரும்பியுள்ளது. அது, கீழ்க்காணும் எந்த வானியல் பொருளில் இருந்து மாதிரிகளை எடுத்து வந்துள்ளது?

அ. வியாழன்

ஆ. சனி

இ. திங்கள் ☑

ஈ. ஞாயிறு



❖ சீனத்து விண்கலமான சாங் 5, நிலவிலிருந்து பாறை மற்றும் குப்பைகளின் மாதிரிகளுடன் புவிக்குத் திரும்பியுள்ளது. இந்த விண்கலம் திங்களில் தரையிறங்கி திங்களின் மேற்பரப்பை துளையிட்டு சுமார் 2 கிலோகிராம் மாதிரிகளைச்சேகரித்தது. 1976'இல் சோவியத் யூனியனின் லூனா 24 ரோபோவின் ஆய்வுக்குப்பிறகு, நிலவுப் பாறைகளின் புதிய மாதிரிகளைக் கொண்டு வந்தது இந்த விண்கலந்தான்.

9.யோகாசனாவுக்கு விளையாட்டுப்போட்டி என்ற அதிகாரப்பூர்வ அங்கீகாரம் வழங்கிய நாடு எது?

அ. இந்தியா ☑

ஆ. பாகிஸ்தான்

இ. இலங்கை

ஈ. சீனா

- யோகாசனத்தை விளையாட்டுப்போட்டியாக அரசு முறையாக அங்கீகரித்திருப்பதாக மத்திய AYUSH அமைச்சகமும் இளையோர் விவகாரங்கள் மற்றும் விளையாட்டு அமைச்சகமும் அறிவித்துள்ளன. அண்மையில், யோகாவை ஒரு விளையாட்டுப்போட்டியாக வளர்த்தெடுப்பதற்காக இந்தியா தேசிய யோகாசனா விளையாட்டு கூட்டமைப்பை நிறுவியது.

10.அண்மைச் செய்திகளில் இடம்பெற்ற, 'Great Astronomical Conjunction' என்பது கீழ்க்காணும் எவ்விரு கோள்களின் நெருக்கமான ஒருங்கமைவாகும்?

அ. வியாழன் மற்றும் சனி ☑

ஆ. சனி மற்றும் வெள்ளி

இ. வியாழன் மற்றும் வெள்ளி

ஈ. புதன் மற்றும் வெள்ளி



- புவியின் பார்வைப்புலத்திலிருந்து, 2 மிகப்பெரிய வாயுக்கோள்களான வியாழன் & சனி ஆகியவற்றின் பெரும் ஒருங்கமைவு 2020 டிச.21 அன்று நிகழ்ந்தது. இக்கோள்கள் ஒன்றுக்கொன்று மிகநெருக்கமாக தோன்றும்போது, அவை வானத்தில் ஒரு பிரகாசமான புள்ளிபோன்று தோற்றமளிக்கும். இருப்பினும், அவற்றின் மெய்யான தொலைவு 735 மில்லியன் கிமீ ஆகும். 1623ஆம் ஆண்டில் இந்தக் கோள்கள் இவ்வாறு மிகநெருக்கமாக தோன்றின.